தினகரன் 20.02.2019

## டிஎன்பிஎல் காகித ஆலையில் மாநில பூப்பந்தாட்ட போட்டி

# காஞ்சிபுரம் அணிக்கு முதல் பரிசு

க.பரமத்தி, பிப். 20: டிஎன்பிஎல் காகித ஆலை சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான பூப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற காஞ்சிபுரம் அணியினருக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது.



கரூர் டிஎன்பிஎல் காகித ஆலை சார்பில் நடந்த மாநில அளவிலான பூப்பந்தாட்ட போட்டியில் வெற்றிபெற்ற அணியினருக்கு நிறுவன செயல் இயக்குனர்(இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர்கள்(மனிதவளம்) பட்டாபிராமன், (வணிகம் மற்றும் மின்சாரம்) பாலசுப்ரமணியன் ஆகியோர் பரிசு மற்றும் கோப்பைகளை வழங்கினர்.

கரூர் ஒன்றியம் காகிதபுரம் பேரூராட்சியில் இயங்கிவரும் டிஎன்பிஎல் காகித ஆலை பல்வேறு சமுதாயப் நலப்பணி திட்டம் சார்பில் காகித ஆலை குடியிருப்பு வளாகத்தில் மாநில அளவிலான பூப்பந்தாட்டப் போட்டிகள் இரண்டு நாட்கள் நடைபெற்றது. தொடக்க விழாவில் காகித ஆலை நிறுவன முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு மாநில பூப்பந்தாட்ட கழகம் செயலாளர் எழிலரசன், காகித ஆலை முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) தங்கராசு, பூப்பந்தாட்ட கழக நிர்வாகிகள் நடேசன், ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். போட்டிகளில் சேலம், சென்னை, திண்டுக்கல், கோவை, வேலூர், மதுரை, திருச்சி, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், தர்மபுரி, பெரம்பலூர், ஈரோடு, விருதுநகர், தூத்துக்குடி, நாகர்கோவில், கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய 18 மாவட்ட பகுதிகளில் இருந்து ஆண்கள் பிரிவில் 53 அணிகளும், பெண்கள் பிரிவிலும் 22 அணிகள் கலந்து கொண்டு விளையாடினர். நடுவர்களாக தலைமை நடுவர் ரகுபதி, சுப்பிரமணி, சச்சிதானந்தம், பலராமன், ராஜாராமன், செந்தில்பாண்டியன், சுரேஷ், கணேசன் மற்றும் அசோகன் ஆகியோர் செயல்பட்டனர்.

இறுதிச் சுற்று போட்டியில் அணிகள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் காஞ்சிபுரம் எஸ்ஆர்எம் குருப் அணிக்கு முதல் பரிசு ரூ.20 ஆயிரம் மற்றும் கோப்பையும், பரங்கிபேட்டை பிஎம்டி அணிக்கு 2வது பரிசு ரூ.15 ஆயிரம் மற்றும் கோப்பையும், மங்கைநல்லூர் எம்பிபிசி அணிக்கு 3வது பரிசு ரூ.10 ஆயிரமும், நஞ்சுண்டபாளையம் அணிக்கு 4வது பரிசு ரூ.8 ஆயிரமும், நெய்வேலி அணிக்கு 5வது பரிசு ரூ.6 ஆயிரமும் வழங்கப்பட்டன. பெண்கள் பிரிவில் கோவை அணிக்கு முதல் பரிசும், பொறியியல் மற்றும் தொழிற்நுட்ப கல்லூரி அணிக்கு 2வது பரிசும், மைலாப்பூர் அணி 3வது பரிசும், நாமக்கல் பாவை தொழிற் நுட்ப கல்லூரி அணிக்கு 4வது பரிசு தொகை மற்றும் கோப்பைகளும் வழங்கப்பட்டது. சிறந்த வீரர்களுக்கான விருதும் வழங்கப்பட்டது.

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழாவிற்கு காகித நிறுவன முதன்மை பொதுமேலாளர்கள் (மனிதவளம்) பட்டாபிராமன், (வணிகம் மற்றும் மின்சாரம்), பாலசுப்ரமணியன் முன்னிலை வகித்தனர். காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் பங்கேற்று பேசியதுடன் பரிசுப் பொருட்கள் மற்றும் கோப்பைகளை வெற்றி பெற்ற அணியினருக்கு வழங்கினார். போட்டிக்கான ஏற்பாடுகளை மனிதவளத்துறையினர் செய்திருந்தனர்.